செ.வெ.எண்-33 நாள்-22.07.2021

# பத்திரிக்கைச் செய்தி.

தமிழ்நாடு அரசு வேளாண் பெருமக்களின் நலனுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. தற்போதுள்ள வேலையாட்கள் பற்றாக்குறையினை சமாளித்து, வேளாண் பணிகளை குறித்த காலத்தே செய்து முடிப்பதற்காக, வேளாண்மைப் பொறியியல் துறை பல்வேறு புதிய, நவீன வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் வாங்கி, விவசாயிகளுக்கு குறைந்த வாடகைக்கு வழங்கி வருகிறது.

அரியலூர் மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மிகுந்த பயனைத் தரக்கூடிய வேளாண் இயந்திரங்களான 1 எண் மண் தள்ளும் இயந்திரம், 5 எண் டிராக்டர்கள், 1 எண் மினி டிராக்டர், 2 எண் நெல் அறுவடை இயந்திரங்கள், 2 டிராக் வகை மண் அள்ளும் இயந்திரங்கள் இருப்பில் உள்ளன.

மேலும், நிலம் சமன் செய்தல், விதைத்தல், கரும்பு, காய்கறி நாற்று நடவு செய்தல், கரும்பு தோகை உரிக்கும் கருவி, உரத்துடன் விதை விதைத்தல், அறுவடை, பல்வேறு பயிர்களை கதிரடித்தல், வைக்கோல் கட்டுதல், நிலத்தில் நிலக்கடலை பயிரை தோண்டி எடுத்து, நிலக்கடலைகளை பறித்தல், தென்னை ஓலையை துகளாக்கும் கருவி, நீர் இறைத்தல் உள்ளிட்ட பல்வேறு வேளாண் பணிகளை மேற்கொள்வதற்கும் டிராக்டரால் இயங்கக்கூடிய இயந்திரங்களும் வேளாண் பொறியியல் துறையில் இருப்பு வைக்கப்பட்டுள்ளன.

இதுபோன்று, டிராக்டரால் இயங்கக்கூடிய அனைத்து கருவிகளும் டிராக்டருடன் மணிக்கு ரூ.340/- என்ற குறைந்த வாடகை அடிப்படையில் விவசாயிகளுக்கு முன்னுரிமை அடிப்படையில் வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

மண் அள்ளுவதற்கும், பண்ணைக் குட்டைகள் அமைத்திடவும், புதர்களை அகற்றவும், மண் தள்ளும் இயந்திரம் (Bull Dozer) மணிக்கு ரூ.840/க்கும் மற்றும் சக்கர வகை மண் அள்ளும் இயந்திரங்கள் (Backhoe front end Leveller) மணிக்கு ரூ.660/-க்கும் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

மேலும் நெல் அறுவடைப் பணியை பொறுத்தவரை, ஈரப்பதம் அதிகமாக உள்ள நெல் வயல்களில் அறுவடை செய்ய டிராக் வகை நெல் அறுவடை இயந்திரம் மணிக்கு ரூ.1415/-க்கு வேளாண்மைப் பொறியியல் துறையால் விவசாயிகளுக்கு வாடகைக்கு வழங்கப்படுகின்றன.

எனவே, மேலே குறிப்பிட்ட வேளாண் இயந்திரங்கள் மற்றும் கருவிகள் தேவைப்படும விவசாயிகள் அரியலூர் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) 9443399525 என்ற எண்ணிற்கும், ஜெயங்கொண்டம் உதவி செயற்பொறியாளர் (வே.பொ) 9003556905 என்ற எண்ணிற்கும், செயற்பொறியாளர் (வே.பொ) 7708692246 என்ற எண்ணிற்கும் தொடர்பு கொள்ளுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.பெ.ரமண சரஸ்வதி, இ.ஆ.ப.,** அவர்கள் தெரிவித்துள்ளார்கள்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**